ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

குறள் முழக்கம்



# திருமதி பிரசன்னா சச்சிதானந்தன் அவர்களோடு ஒரு நேர்காணல்



*(நேர்காணல் நிகழ்த்தியவர் நம் உலகத் திருக்குறள் இணையக் கல்விக் கழகத்தின் அமெரிக்க ஒருங்கிணைப்பாளர் அறிஞர் இர.பிரபாகரன் அவர்கள்)*

கேள்வி: திருமதி பிரசன்னா சச்சிதானந்தன் அவர்களே! வணக்கம்.

தமிழ் நாட்டிலிருந்து, உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம் என்ற அமைப்பு திங்கள்தோறும் "குறள் முழக்கம்" என்ற மின்மடலை வெளியிடுகிறது. அந்த மின்மடலில் திருக்குறளில் சாதனை புரிந்தவர்களைப் பற்றிய செய்திகளை வெளியிட விரும்புகிறோம். அமெரிக்காவில் 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்து சாதனை புரிந்தவர்களில் நீங்களும் ஒருவர் என்று கேள்விப்பட்டேன். உங்கள் சாதனைகளைப் பற்றி உங்களிடம் ஒரு சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்.

திருமதி பிரசன்னா சச்சிதானந்தன்: என்னை தொடர்புகொண்டு திருக்குறளோடு எனது பயணத்தை அசைபோடும் இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு நன்றிகள்.

கேள்வி: நீங்கள் எப்பொழுது திருக்குறளைப் படிக்கத் தொடங்கினீர்கள்?

2012ல் எனது மூத்த மகள் அத்விகாவிற்கு திருக்குறள் சொல்லிக் கொடுப்பதற்காக படித்தேன். அவள் கேட்க, நான் படிக்க என்று தொடர்ந்தது. இந்த பரிமாற்றம் எனது மகளுடன் பெரும் அணுக்கத்தை உருவாக்கியது என்று தான் சொல்ல வேண்டும். இருவர் சேர்ந்து எதை படித்தாலும் பல கேள்விகள் எழும், விவாதங்கள் இருக்கும், ஆழமான புரிதல் ஏற்படும் என்று நான் ஆணித்தரமாக நம்புகிறேன். அப்போது எனது மகள் கேட்ட சில கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் திணறியதும் உண்டு.

கேள்வி: உங்களுக்குத் திருக்குறளில் ஆர்வத்தை உண்டாக்கியவர் யார்?

பொதுவாக தமிழ் படிக்க விருப்பம், பல நூல்களை படிக்க விருப்பம். அவ்வளவே. என் மகளுக்கு சொல்லித்தரும் வழியில் நானும் கொஞ்சம் படித்து கொண்டேன். கொஞ்சமாக கொஞ்சமாக ஆர்வம் கூடிட ஏன் பொருளோடு நாமும் ஒப்புவிக்க கூடாது என்று தோன்றியது? கூடுதல் பயிற்சி மூலம் மூன்று மணிகள் 52 நிமிடங்கள் எனும் குறைந்த நேரத்தில் 1330 குறளையும் பொருளோடு சொல்லி இருக்கிறேன்.

கேள்வி: 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்வதற்கு எவ்வளவு காலம் ஆகியது? அவற்றை எப்படிப் படித்தீர்கள்?

மகளோடு படித்த போது ஒவ்வொரு குறளுக்கும் 10 நிமிடங்கள் எடுத்துக்கொண்டதாக நினைவு. பின்னர் தொடர்ந்து ஒரே மூச்சாக சொல்லும் முன்னர் நான்கு நாட்கள் தொடர்ந்து பயிற்சி எடுத்தேன்.

கேள்வி: நீங்கள் "குறளரசி" என்ற பட்டம் பெற்றதாகக் கேள்விப்பட்டேன். அந்தப் பட்டம் உங்களுக்கு யார் அளித்தது? எப்பொழுது அளிக்கப்பட்டது?

பிள்ளைகள் பொருளோடு சொல்லும் ஒவ்வொரு குறளுக்கு ஒரு வெள்ளியை பரிசளிக்கும் போட்டியை நடத்தி வருகிறது மினசோட்டாத்தமிழ்ச் சங்கம். பெரியோரும் திருக்குறள் ஒப்புவிக்க வாய்ப்பு வேண்டும் என்ற வேண்டுதலை ஏற்று மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் சிறப்பு மேடையை 2016 சனவரி 24 ஆம் நாள் ஏற்படுத்தி தந்தது. மேடை அமைத்து கொடுத்ததோடு நில்லாமல் 2016 பிப்ரவரி மாதம் நிகழ்ந்த சங்கமம் பொங்கல் விழாவில் எனக்கு "குறள் அமுதாள்"எனும் பட்டத்தை அளித்து என்னை பெருமை படுத்தியது இச்சங்கம். இதை தொடர்ந்து 2016 மார்ச் மாதம் விரிகுடாக் கலைக் கூடம் (BAFA) நடத்திய திருக்குறள் விழாவில் சொல் வேந்தர் திரு. சுகி சிவம் ஐயா அவர்களின் கரங்களால் "குறளரசி" என்ற பட்டத்தை வழங்கி கவுரவித்தது.

கேள்வி: எல்லாக் குறளுக்கும் உங்களுக்குப் பொருளும் தெரியும் அல்லவா?

ஆம் பொருள் தெரியும். மேலும் இளையோருக்கு சொல்லிக்கொடுக்க எதுவாக கதைகள், நிகழ்விகள் என்று பலவற்றையும் சேர்த்து படித்தது கூடுதல் சிறப்பு.

கேள்வி: திருக்குறள், தமிழ் தொடர்பாக நீங்கள் வேறு என்ன பணிகள் செய்து வருகிறீர்கள்?

திருமதி பிரசன்னா சச்சிதானந்தன்: தொடர்ந்து நிகழ்கால தமிழ் இலக்கியங்களைப் படித்து கொண்டிருக்கிறேன். மினசோட்டா தமிழ் பள்ளியின்

முன்னெடுப்பில் நிகர் நிலையில் தமிழ் இளங்கலை பட்டப்படிப்பை முடித்திருக்கிறேன். இத்தமிழ் பள்ளியில் தன்னார்வ ஆசிரியராகவும், இரு மொழி முத்திரை தேர்வுக்கான மதிப்பீட்டாளராகவும் செயலாற்றிக் கொண்டிருக்கிறேன்.

கேள்வி: தமிழில் வேறு சாதனைகள் புரியும் திட்டம் உள்ளதா?

தொடர்ந்து தமிழ் படித்து முதுகலை, ஆராய்ச்சி படிப்பு என்று போகஆசை. தமிழ் கல்வி வளர்க்கும் பணிகளில் தொடர்ந்து பங்குகொள்ளவேண்டும் என்றும் விரும்புகிறேன். பிள்ளைகளுக்கு திருக்குறள்மட்டும் அல்லாது இலக்கியங்களைக் கொண்டு சேர்க்க எளியமுறைகளை உருவாக்க வேண்டும்.

கேள்வி: உங்களைப்போல் திருக்குறள் கற்க வேண்டும் யாராவது முயற்சி செய்திருக்கிறார்களா? நீங்கள் மற்றவர்களை ஊக்குவித்திருக்கிறீர்களா?

பள்ளி மாணவர்களையும் பல நேரங்களில் இலக்கியங்கள் படிக்கவும்,போட்டிகளில் பங்குகொள்ளவும் ஊக்கப்படுத்தி இருக்கிறேன். குறள்களைப் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க விரும்பும்பெற்றோர்களுக்கு வழிகாட்டியதும் உண்டு.

கேள்வி: உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் மூன்று குறட்பாக்களைக் கூறுங்கள்.

1. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

அறத்துப்பால் கள்ளாமை அதிகாரத்தின் குறள்: பிறருக்கு சொந்தமான பொருளை கவர்ந்திட எண்ணுவதே தீயது என்கிறது.

2. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

பொருட்பால் காலமறிதல் அதிகாரத்தின் குறள்: எந்த செயலையும் செய்து முடிக்க சரியான காலமும் செயல்திடமும் முக்கியம் என்பதை வலியுறுத்துகிறது.

3. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

முகம் மலர்ந்து இனிமையாகப் பேசுவது, பொருள் கொடையைவிட உயர்ந்தது.

நன்றி. உங்கள் அரிய சாதனைகளுக்காக உங்களுக்கு எங்கள் வாழ்த்துகள்!

இந்த வாய்ப்பை கொடுத்த உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகத்திற்கும் இந்த நேர்காணலை ஒருங்கிணைத்த முனைவர் பிரபாகரன் ஐயா அவர்களுக்கும் நன்றிகள். இந்த சாதனைக்கு மேடை அமைத்து கொடுத்த மினசோட்டாத் தமிழ்ச் சங்கத்திற்கும், என்னைபட்டங்கள் கொடுத்து மரியாதை செய்த மினசோட்டாத் தமிழ்ச் சங்கம்மற்றும் விரிகுடாக் கலைக் கூடத்திற்கும் (BAFA) இன்று எனது நன்றிகளை காணிக்கை ஆக்குகிறேன்.

# செல்வி அத்விகா அவர்களோடு ஒரு நேர்காணல்



கேள்வி: செல்வி அத்விகா அவர்களே! வணக்கம். தமிழ் நாட்டிலிருந்து, உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம் என்ற அமைப்பு திங்கள்தோறும் "குறள் முழக்கம்" என்ற மின்மடலை வெளியிடுகிறது. அந்த மின்மடலில் திருக்குறளில் சாதனை புரிந்தவர்களைப் பற்றிய செய்திகளை வெளியிட விரும்புகிறோம். அமெரிக்காவில் 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்து சாதனை புரிந்தவர்களில் நீங்களும் ஒருவர் என்று கேள்விப்பட்டேன். உங்கள் சாதனைகளைப் பற்றி உங்களிடம் ஒரு சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்.

**செல்வி அத்விகா:** நன்றி. விளையாட்டாகத் துவங்கியது தான் இந்தப் பயணம். முதலில் போட்டிக்காகப் படித்தேன், அடுத்து பொம்மை வாங்கப் (American Girl Doll) படித்தேன் அடுத்து எல்லா அதிகாரங்களையும் படித்திட வேண்டும் எனும் இலக்கோடு படித்தேன். இப்போது 1330 குறள்களைப் படித்த நிறைவோடு பொது அறிவை பெருக்கிக்கொண்ட உணர்வும் எனக்கு கிடைத்திருக்கிறது.

கேள்வி: நீங்கள் எப்பொழுது திருக்குறளைப் படிக்கத் தொடங்கினீர்கள்?

எனது ஐந்து வயதில், எளிமையாக ஒலிக்ககூடிய குறள்களை என்னோட அம்மா சொல்லித் தந்தார்கள். இரவு தூக்கத்திற்கு முன்னர் கதைகள் "Bedtime Stories" சொல்வது வழக்கம். அந்த நேரத்தை புதுக் குறள்கள் படிக்க பயன் படுத்துவோம்.

கேள்வி: உங்களுக்குத் திருக்குறளில் ஆர்வத்தை உண்டாக்கியவர் யார்?

எனது அம்மாதான் திருக்குறள் படிக்கும் ஆர்வத்தை எனக்குள்ள உண்டாக்கினாங்க. அம்மா கதை சொல்லுவாங்க. சின்ன நிகழ்வை சொல்லுவாங்க.. அதோட சேர்த்து குறளைச் சொல்லிப் பொருள் சொல்வாங்க. அம்மா சொன்ன கதைகள் தான் எனக்கு திருக்குறள் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை உண்டாக்கியது.

கேள்வி: 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்வதற்கு எவ்வளவு காலம் ஆகியது? அவற்றை எப்படிப் படித்தீர்கள்?

திருக்குறள் படிக்க ஐந்து வயதில் தொடங்கி நான் , எனது ஏழாவது வயதில் 1330 குறளையும் கற்றுக்கொண்டேன். எனக்கு சரியாக நினைவு இல்லை. காலையில, பள்ளிக்கு போகும் போதும் வரும் வழியிலும் சொல்லிப் பழகுவேன். புதிதாக குறள் கற்க துவங்குவது எப்பொழுதுமே இரவு தூக்கத்திற்கு முன்னர் தான். கிட்டதட்ட ஒவ்வொரு குறளையும் பொருளோடு படிக்க அரை மணி நேரம் எடுத்து கொண்டிருப்பேன் என்று நினைக்கிறேன்.

கேள்வி: நீங்கள் "குறள் இளவரசி" என்ற பட்டம் பெற்றதாகக் கேள்விப்பட்டேன். அந்தப் பட்டம் உங்களுக்கு யார் அளித்தது? எப்பொழுது அளிக்கப்பட்டது?

தொடர்ந்து குறள் படிக்க ஊக்கப்படுத்தியது ஒரு குறளுக்கு ஒரு வெள்ளி பணப் பரிசு என்று மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்த போட்டிதான். 2015 சூலை மாதம் MNTS முத்தமிழ் விழா மேடையில் எனக்கு "குறள் மொழியாள்" என்ற பட்டத்தைப் பேச்சாளர் திருமதி சுமதிஸ்ரீ அவர்களின் கைகளால் வழங்கி மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் என்னை

பெருமை படுத்தியது. இதை தொடர்ந்து 2016 மார்ச் மாதம் விரிகுடாக் கலைக் கூடம் (BAFA) நடத்திய திருக்குறள் விழாவில் சொல் வேந்தர் திரு. சுகி சிவம் ஐயா அவர்களின் கரங்களால் "குறளரசி" என்ற பட்டத்தை வழங்கி கவுரவித்தது.




கேள்வி: எல்லாக் குறளுக்கும் உங்களுக்குப் பொருளும் தெரியும் அல்லவா?

குறள்கள் ஒவ்வொன்றையும் பொருளுணர்ந்தே படித்தேன். சொல்லப்போனால் ஒவ்வொரு குறளையும் கதையில் தொடங்கி, பொருளில் தொடர்ந்து பின்னர்தான் குறளைப் படித்தேன். பொருளுணர்ந்து படிக்கும்போது தான் குறளை மனப்பாடம் செய்வது எளிதாக இருந்தது.

கேள்வி: திருக்குறள், தமிழ் தொடர்பாக நீங்கள் வேறு என்ன பணிகள் செய்து வருகிறீர்கள்?

தொடர்ந்து எளிமையான தமிழ் நூல்களைப் படித்து கொண்டிருக்கிறேன். மினசோட்டா தமிழ் பள்ளியில் தமிழ்

மொழியைத் தொடர்ந்து படித்துக்கொண்டிருக்கிறேன். தமிழ் இருக்கை போன்ற தமிழ் சார்ந்த முன்னெடுப்புகளுக்கு நிதி அளிப்பது மற்றும் நிதி சேர்க்கும் பணிகளில் உதவுவது என சிறு சிறு பணிகளைச் செய்து வருகிறேன்.

கேள்வி: தமிழில் வேறு சாதனைகள் புரியும் திட்டம் உள்ளதா?

தொடர்ந்து தமிழ் படித்து இரு மொழி முத்திரை வாங்க வேண்டும். தொடர்ந்து தமிழ் கல்வி வளர்க்கும் பணிகளில் பங்குகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். தமிழில் சரளமாக படிக்க பேச வேண்டும், பல மேடைகளை எனது தமிழ் பேச்சால் அணி செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்.

கேள்வி: உங்களைப்போல் திருக்குறள் கற்க வேண்டும் யாராவது முயற்சி செய்திருக்கிறார்களா? நீங்கள் மற்றவர்களை ஊக்குவித்திருக்கிறீர்களா?

நான் யாரையும் நேரடியாக ஊக்கப்படுத்தியதாக நினைவு இல்லை. ஆனால் என்னைப் பார்த்து பலர் திருக்குறள் படிக்க வேண்டும் என்று முன்வந்ததை கேட்கும் போது மகிழ்ச்சிதான்.

கேள்வி: உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் மூன்று குறட்பாக்களைக் கூறுங்கள்.

செல்வி அத்விகா:

1.முன்னாள் இந்திய குடியரசு தலைவர் மேதகு அப்துல் கலாம் ஐயாவிற்கு மிகவும் பிடித்த

எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

எனும் குறள் நம்பிக்கை தளரும் போதெல்லாம் நல்ல ஊக்கத்தை தரும்.

2.பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்

என்று வாய்மைக்கு புது இலக்கணம் சொல்லும் இந்த குறளும் எனக்கு பிடித்தமானது.

3.முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

எது உண்மை நட்பு என்று சொல்லும் இந்த குறள் சரியான நட்பை கண்டுக்கொள்ள உதவுகிறது.

நன்றி. உங்கள் அரிய சாதனைகளுக்காக உங்களுக்கு எங்கள் வாழ்த்துகள்!

இந்த வாய்ப்பை கொடுத்த உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகத்திற்கு எனது நன்றிகள். இந்த சிறப்பிற்கு முதன்மை காரணமாக இருந்த எனது அம்மா, உடன் இருந்து ஊக்கப்படுத்திய அப்பா மற்றும் தகுந்த வாய்ப்புகளை ஏற்படுத்தும் மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் போன்ற தமிழ் அமைப்புகள் என அனைவரையும் இன்று நன்றியுடன் நினைவு கொள்கிறேன்.

**உலகத் திருக்குறள் இணையக்கல்விக்கழகம்** வெளியிடும் செய்திமடல் (திங்கள்தோறும் பத்தாம்நாள் வெளிவருகின்றது.)

வள்ளுவர் குறளை வையகமெங்கும் பரப்புவது நம் கடமை. அதனைப் போன்றே வையகமெங்கும் நடக்கும் திருக்குறள் தொடர்பான நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி ஓர் இதழ் மூலமாகத் தமிழ்மக்கள் அனைவரும் அறியும்வண்ணம் வழங்குவதும் இன்றியமையாததே.உலகையே சுருட்டி சட்டைப்பையில் இருக்கும் கைப்பேசி வழியாக அறிமுகப்படுத்தும் இணையமும் புலனமும் நமக்கு இப் பணியில் துணைநிற்கும்போது நாம் வாளா இருக்கலாமா?

ஆங்கிலத் திங்கள்தோறும் பத்தாம் நாள் உலகத் திருக்குறள் இணையக் கல்விக் கழகத்தினால் வெளிவரும் இந்த செய்திமடல் உங்களுக்கானது.நீங்கள் உலகின் எந்த மூலையிலிருந்தாலும் உங்கள் பகுதியில் நிகழும் குறள் தொடர்பான நிகழ்ச்சிகளை எங்களுக்கு எழுதியனுப்புங்கள்.வழமையான ஒருங்குறி (யூனிகோடு) அச்சுருக்களைப் பயன்படுத்தி சொல் கோப்புகளாக (MS Word) arjal@kuralvirtual.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.படங்கள் இருப்பின் அவற்றையும் தனியே படக்கோப்புகளாக அனுப்புங்கள்.

குறளைப் பரப்பும் பணியில் முனைந்துள்ள அமைப்புகளையும் சான்றோர்களையும் பற்றி எமக்குத் தெரிவியுங்கள்.அவ் விவரங்கள் வெளிவந்தால் குறள் பரப்பும் பணிக்கு அறிந்தேற்பு வழங்கிய நிறைவு நம் அனைவருக்குமே ஏற்படும் அன்றோ?

இணையவழி இலவசத் தனிச்சுற்றுக்கு விற்பனைக்கு அல்ல.